# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

மனு எண்: 1019/2017/ஊராட்சி

ஆணை எண்: 192 /2017

நாள்: 27/07/2017

வெ. நாகராஜன்,
7/12, வெறியம்பட்டி,
வீரணம்பட்டி அஞ்சல்,
கடவூர் வட்டம், கரூர் மாவட்டம். - மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
கடவூர் ஒன்றியம். - எதிர் மனுதாரர்

## ஆணை

கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், வெறியம்பட்டி ஊராட்சியில் வசிக்கும் திரு. வெ. நாகராஜன், என்பவர் அவருடைய 12.7.2017 நாளிட்ட மனுவில் கடவூர் ஒன்றியத்தில் 2011–12 ஆம் நிதியாண்டு முதல் 2017ம் நிதியாண்டு வரை ஊரக வளர்ச்சித்துறை மூலம் செயல்படுத்தப்படுகின்ற மத்திய, மாநில அரசின் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படாமல், செயல்படுத்தப்பட்டதாக கணக்கு காட்டப்பட்ட ரூபாய்.20 கோடி அளவிற்கு ஊழல் முறைகேடு நடைபெற்றுள்ளதாக தெரிவித்து, லஞ்ச ஒழிப்புத்துறை, ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் திட்ட இயக்குநர் ஆகியோர்களுக்கு புகார் மனு கொடுத்தாகவும், ஆனால் அப்புகார் மனுமீது யாரும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையெனத் தெரிவித்து, செயல்படுத்தப்பட்ட பலதிட்டப் பணிகளில் நடை பெற்றுள்ள ஊழல் முறைகேடுகளால் அரசிற்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்பிற்கு காரணமாக அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு வெறியம்பட்டி ஊராட்சி மற்றும் கரூர் மாவட்ட ஊராட்சித்துறை சார்ந்தது ஆகும். எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 27-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

27/7/17

பெறுநர்

திரு. வெ. நாகராஜன்,
7/12, வெறியம்பட்டி,
வீரணம்பட்டி அஞ்சல்,
கடவூர் வட்டம்,
கரூர் மாவட்டம் – 621 301.

நகல்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கரூர், (இணைப்புகளுடன்)
கரூர் மாவட்டம்.